

பாடம் 9

மே 25-31

# இறையரசின் அஸ்திபாரம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** வெளி 14:6–12; பிர 12:13,14; ஆதி 28:9; தானி 7:25.

**மனன வசனம்:** அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று. வெளி 12:17.

அட்வென்டிஸ்டுகள் வேதாகமத்தை தீவிரமாக ஆராய்ந்தபோது, பரலோக ஆசரிப்புக் கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் நியாயப்பிரமாணம் முக்கியப் பங்காற்றுவதைப் புரிந்துகொண்டார்கள். தேவனுடைய நியாயப்பிரமாணத்தை ஆராய்ந்தபோது, நான்காம் கற்பனையான ஓய்வுநாள்குறித்த முக்கியத்துவத்தைக் கண்டுகொண்டார்கள். மற்ற எதையும்விட இந்தக் கட்டளைதான் தேவனை நம் சிருஷ்டிகராக அடையாளப்படுத்துகிறது; சிருஷ்டிப்புதான் சகல மெய்தொழுகைக் கும் அஸ்திவாரமாக இருக்க முடியும். இந்தக் கருத்து பூலோக வரலாற்றின் இறுதி நாட்களில் முக்கியப் பங்காற்றும். வெளி 14:6-12.

தேவ பிரமாணத்தைக் குறைத்துக் காட்டி, தேவனைத் தொழவிடாமல் கெடுக்கவேண்டும் என்பதே ஆரம்பம்முதல் சாத்தானுடைய நோக்கமாக இருக்கிறது. 'ஒன்றில்' குற்றவாளி ஆக்கிவிட்டால், 'எல்லாவற்றிலும் குற்றவாளி ஆக்கிவிடலாம்' என்பதை அறிந்திருக்கிறான். யாக் 2:10. அதனால், தேவ பிரமாணத்தை மீறும்படி மக்களைத் தூண்டுகிறான். ஓய்வுநாளானது மக்களுக்கு சிருஷ்டிகரையும், அவரைத் தொழவேண்டியவிதத்தையும் ஞாபகப்படுத்துவதால், அவன் ஓய்வுநாளை வெறுக்கிறான். நியாயப்பிரமாணமானது பாவம் என்ன வென்று விளக்குவதால், மக்கள் தேவனுக்கு உண்மையாக வாழும்போது, நியாயப் பிரமாணம் செல்லுபடியாகும் என்பதை நிரூபிக்கிறார்கள்; அதில் ஓய்வுநாள் கட்டளையும் உண்டு.

ஆசரிப்புக்கூடாரம், தேவனுடைய பிரமாணம், ஓய்வுநாள், மிருகத்தின் முத்திரை சம்பந்தமாக வரவிருக்கிற நெருக்கடி ஆகியவற்றிற்கு இடையே உள்ள தொடர்பை இந்த வாரப் பாடத்தில் பார்ப்போம்.

***மாபெரும் போராட்டம், 25-27ம் அதிகாரங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்த வாரப் பாடம் 2024, மே 25 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்.***

# ஆசரிப்புக்கூடாரமும் நியாயப்பிரமாணமும்

**ஆசரிப்புக்கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கை பெட்டிக்குள் என்ன இருந்தது? வெளி 11:19; யாத் 25:16; 31:18; வெளி 12:17.**

பாவநிவாரண நாள் என்பது நியாயத்தீர்ப்பின் நாளாக இருந்தது. அன்று இஸ்ரவேலர் அனைவரும் மனந்திரும்பி, தங்கள் ஆத்துமாக்களை ஆராய்ந்து, தங்கள் அலுவல்களை விட்டுவிட்டு அந்தப் பண்டிகையில் கலந்துகொள்ள வேண்டும். லேவி 23:29-31. அந்த நாளில் மட்டும்தான் பாவநிவிர்த்தி செய்வதற்காக பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்வான். ஆசரிப்புக்கூடாரத்தின் அந்த உள் அறையில், உடன்படிக்கை பெட்டி இருந்தது. அந்தப் பெட்டிக்குள்ளாக கற்பலகைகளில் எழுதப்பட்ட தேவனுடைய பத்துக்கட்டளையாகிய பிரமாணம் இருந்தது. அந்தப் பெட்டியின் பொன் மூடி கிருபாசனம் எனப்பட்டது; அங்கே பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாவத்தைச் சுத்திகரிப்பதற்காக இரத்தம் தெளிக்கப்படும். அங்கு செலுத்தப்பட்ட ஒவ்வொரு பலியும் பாவமனிதர்கள்மீது தேவன் காட்டிய இரக்கத்தை வெளிப்படுத்தியது; ஆனால் பாவநிவாரணநாளானது, நியாயத்தீர்ப்பு வரையிலும் பாவம் வைக்கப்படும் என்பதைக் காட்டியது. எபி 10:3. உண்மையில், பல நூற்றாண்டுகள் கழித்து, இயேசு சிலுவையில் மரித்தபோது அவரது இரத்தத்தால்மட்டுமே பாவம் முற்றிலும் அகற்றப்படவிருந்தது. அவரது இரத்தத்தில் விசுவாசம் வைப்பதன்மூலம் பாவத்திலிருந்து சுத்திகரிப்படுகிறோம். 1பேதுரு 1:18,19. அங்கே, தேவனுடைய பிரசன்னத்தில், நீதியும் இரக்கமும் இணைந்து காணப்படுகின்றன.

பரலோகத்தில் 'தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டு' இருந்ததையும், அங்கே 'அவருடைய உடன்படிக்கையின் பெட்டி' காணப்பட்டதையும் யோவான் கண்டார். வெளி 11:19. 'பரலோக ஆலயத்தின் மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் தெய்வீகப் பிரமாணமானது பரிசுத்தமான இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரமாணத்தை சீனாய் மலைமீது இடிமுழக்கங்களுக்கிடையில் தேவனே தம் சொந்த விரலினால் கற்பலகையில் எழுதினார். பரலோகப் பரிசுத்தஸ்தலத்தில் உள்ள தேவனுடைய பிரமாணம்தான் மூலப்படிவம்; அதிலிருந்துதான் கற்பலகைகளில் எழுதப்பட்டது; மோசேயால் எவ்வித பிழையுமின்றி பத்துக்கற்பனையாகப் பதிவுசெய்யப்பட்டது. இந்த மிக முக்கியக் கருத்தைப் புரிந்துகொண்டவர்கள், தெய்வீகப் பிரமாணத்தின் பரிசுத்தத்தையும் மாறாத தன்மையையும் காணும்படி வழிநடத்தப்பட்டார்கள்'.

ஆரம்பக்கால அட்வென்டிஸ்டுகள் ஆசரிப்புக்கூடாரம்பற்றி வேதாகமத்தில் ஆராய்ந்தபோது, தேவபிரமாணம், தேவபிரமாணத்தின் மையக்கட்டளையான ஓய்வுநாள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டார்கள். பரலோக ஆசரிப்புக் கூடாரத்தில் காட்டப்பட்ட உடன்படிக்கை பெட்டிக்குள் தேவனுடைய பிரமாணம் இருக்குமானால், சிலுவையோடு அது ஒழிந்து போயிருக்காது என்பதை உணர்ந்தார்கள்.

---

**மணிக்கு 1000 கி.மீ. வேகத்தில், ஒவ்வொரு வாரமும் தவறாமல் நம்மைத் தேடி வருகிற ஓய்வு நாள்பற்றி யோசியுங்கள். சிருஷ்டிப்பு கோட்பாட்டின் முக்கியத்துவம்பற்றி என்ன புரிகிறது? இது போன்ற வேறு என்ன உபதேசம் நமக்கு மீண்டும்மீண்டும் நினைவூட்டக்கூடியதாக இருக்கிறது?**

# தேவபிரமாணத்தின் மாறாத் தன்மை

**கிறிஸ்தவர்களுக்கும் தேவனுடைய பிரமாணத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றி பின்வரும் வசனங்கள் என்ன சொல்கின்றன? மத் 5:17,18; சங் 111:7,8; பிர 12:13,14; 1யோவான் 5:3; நீதி 28:9.**

தேவபிரமாணத்தின் பரிசுத்ததன்மையைப் போற்றின புரொட்டஸ்டன்ட் சீர்திருத்தவாதிகளுடைய அடிச்சுவடுகளை செவந்த்-டே அட்வென்டிஸ்டுகள் பின்பற்றினார்கள். ஜான் வெஸ்லியின் உறுதியான நம்பிக்கைபற்றி இவ்வாறு சொல்லப்படுகிறது: 'இஸ்ரவேல் புத்திரருக்கு மோசேமூலம் கொடுக்கப்பட்ட சடங்காச்சார அல்லது சம்பிரதாயப் பிரமாணத்தில் தேவாலயத்தின் பழைய பலி முறைகளும், ஆராதனைகளின் சகல தடையுத்தரவுகளும் கட்டளைகளும் இடம் பெற்றிருந்தன; அவற்றை அழித்து, ஒழிப்பதற்கு நம் கர்த்தர் வந்தார் ... ஆனால் பத்துக்கற்பனைகள் சொல்வதும், தீர்க்கதரிசிகளால் வலியுறுத்தப்பட்டதுமான ஒழுக்கப்பிரமாணத்தை அவர் ஒழிக்கவில்லை. இதில் எந்தப் பகுதியையும் இல்லாமல் போகச் செய்வது அவரது திட்டமல்ல. இந்தக் கட்டளை ஒருபோதும் ஒழியாது; அது பரலோகத்திலுள்ள உண்மையுள்ள சாட்சிகள்போலவே உறுதியாக நிற்கிறது. இந்தக் கட்டளையின் ஒவ்வொரு பகுதியும் எல்லா மனிதர்களுக்கும் உரியது; இது நேரத்தையோ, இடத்தையோ, மாறக்கூடிய மற்ற எந்தச் சூழ்நிலைகளையோ சார்ந்ததல்ல; மாறாக, தேவதன்மையையும், மனித தன்மையையும், தேவனுக்கும் மனிதருக்கும் இடையே உள்ள மாறாத உறவையும் சார்ந்தது'[1].

**யாத் 34:5-7ஐ ரோமர் 7:11,12; சங் 19:7-11; 89:14; 119:142,172 ஆகியவற்றுடன் ஒப்பிடுங்கள். தேவனுடைய பிரமாணத்திற்கும் தேவனுடைய குணத்திற்கும் இடையேயுள்ள உறவுபற்றி இந்த வசனங்கள் என்ன சொல்லுகின்றன?**

தேவனுடைய பிரமாணம் அவரது குணத்தின் பிரதியாகவும், அவரது சிங்காசனத்தின் அஸ்திவாரமாகவும், மனுக்குலத்தின் ஒழுக்க ஆதாரமாகவும் இருப்பதால், சாத்தான் அதை வெறுக்கிறான். 'பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலம் பரலோக பரிசுத்தஸ்தலத்தின் சாயலாக இருந்தது என்பதையும், பரலோகத்தின் உடன்படிக்கைப்பெட்டிக்குள்வைக்கப்பட்டிருந்தகற்பனையின்மிகச்சரியானமறுப்பதிப்பே பூமியின் உடன்படிக்கைப் பெட்டிக்குள்ளிருந்த கற்பனை என்பதையும் எவரும் காணத் தவறமுடியவில்லை; பரலோக பரிசுத்தஸ்தலதைப்பற்றிய உண்மையை ஏற்றுக்கொண்டால் தேவகற்பனையின் கோரிக்கைகளையும், நான்காவது கற்பனைபடி ஓய்வுநாளைக்கைக்கொள்ளவேண்டிய கடமையையும் ஒப்புக்கொண்டாக வேண்டும். பரலோக பரிசுத்தஸ்தலத்தில் நடைபெறும் கிறிஸ்துவின் ஊழியம்பற்றி முரண்பாடின்றி வெளிப்படுத்துகிற வேதவாக்கியங்களுக்கு எதிராக கசப்போடும் தீவிரத்தோடும் எதிர்ப்பு கிளம்புவதற்கான இரகசியம் இங்குதான் உள்ளது'.[2]

[1] Upon Our Lord's Sermon on the Mount," Discourse V, John Wesley's Sermons: An Anthology (Nashville, TN: Abington Press, 1991), pp. 208, 209.

[2] Ellen G. White, The Great Controversy, p. 435.

---

**நாம் இனியும் பத்துக்கற்பனைகளுக்குக் கீழ்ப்படியவேண்டியதில்லை என்பதற்கு மக்கள் பெரும்பாலும் கொடுக்கிற காரணங்கள் என்ன? அதற்குப் பின்னணியாக இருப்பது என்ன?**

# ஓய்வுநாளும் நியாயப்பிரமாணமும்

**சிருஷ்டிப்பு, ஓய்வுநாள், தேவனுடைய பிரமாணம் ஆகியவற்றிகு இடையேயுள்ள தொடர்பு என்ன? வெளி 14:6,7; வெளி 4:11; ஆதி 2:1-3; யாத் 20:8-11.**

தேவனுடைய பார்வையில் நாம் எவ்வளவு மதிப்பானவர்கள் என்பதை சிருஷ்டிப்பு சொல்லுகிறது. நாம் பிரபஞ்சத்தில் ஒரு புழுதியோ, மரபணு விபத்தால் உண்டானவர்களோ அல்ல. அதாவது, வாழ்க்கையின் தோற்றம்பற்றி சில விஞ்ஞான அறிக்கைகள் சொல்வதை, செய்தி ஊடகங்களும் பிரபல கலாச்சாரக் கருத்துகளும் பிரபலமாக்கி, வேதாகமப் பதிவுக்கு முரணான கருத்துகளை ஒவ்வொரு விதத்திலும் முன்வைக்கின்றன.

இயேசு நம்மைப் படைத்ததால் இவ்வுலகத்தில் இருக்கிறோம். அவர் நம்மைச் சிருஷ்டித்ததால் மட்டுமல்ல, நம்மை மீட்டுக்கொண்டதாலும் நம் தொழுகைக்கு பாத்திரராக இருக்கிறார். சகல மெய்த்தொழுகைக்கும் சிருஷ்டிப்பும் மீட்புமே மையமாக இருக்கின்றன. எனவே, இரட்சிப்பின் திட்டத்தைப் புரிந்துகொள்ள ஓய்வுநாள் முக்கியம். ஓய்வுநாளானது சிருஷ்டிகரின் அக்கறையையும் மீட்பரின் அன்பையும் எடுத்துக்காட்டுகிறது.

சிருஷ்டிப்பு வாரத்தின் முடிவில், தாம் உண்டாக்கின உலகத்தின் அழகையும் மகத்துவத்தையும் பார்த்து தேவன் ஓய்ந்திருந்தார். நமக்கு முன்மாதிரியாகவும் ஓய்ந்திருந்தார். நம்மைச் சிருஷ்டித்தவரை வாராவாரம் துதிப்பதற்கான நேரம்தான் ஓய்வுநாள். அவரை ஓய்வுநாளில் தொழும்போது, வேறு எந்த நாளிலும் அல்லாமல் அந்த நாளில் மட்டுமே அவர் வைத்துள்ள விசேஷித்த ஆசீர்வாதங்களுக்கு நம் இருதயங்களைத் திறக்கிறோம்.

அவர் நம்மைக்குறித்து வைத்திருந்த நோக்கத்திலிருந்து நாம் விலகினபோது நம்மைக் கைவிடாமல் அன்புகூர்ந்த ஒரு சிருஷ்டிகரை ஓய்வுநாள் சுட்டிக்காட்டுகிறது. அவருக்குள் நாம் இளைப்பாறுவதற்கான ஒரு நித்திய அடையாளமாக ஓய்வுநாள் இருக்கிறது. சிருஷ்டிகர் மீதான மெய்ப்பற்றின் விசேஷித்த அடையாளமாக இருக்கிறது. எசே 20:12,20. அது கிரியைகளுக்கு அல்ல இளைப்பாறுதலுக்கும், கிரியைத்துவத்திற்கு அல்ல கிருபைக்கும், ஆக்கினைக்கு அல்ல நிச்சயத்திற்கும், இரட்சிப்புக்காக நம்மையல்ல தேவனையே சார்ந்திருப்பதற்கும் ஓர் அடையாளமாக இருக்கிறது. மெய்யான ஓய்வுநாள் இளைப்பாறுதலானது நம்மைச் சிருஷ்டித்து, நம்மை மீட்டு, மீண்டும் நமக்காக வருகிறவரின் அன்பின் கரங்களில் கிருபையால் இளைப்பாறுவதாகும்.

உலகத்திற்கான தேவனுடைய இறுதிச் செய்தியான வெளி 14இன் செய்தி, ஒவ்வோர் ஓய்வுநாளிலும் அவரது அன்பிலும் அக்கறையிலும் இளைப்பாறும்படிக்கு மக்களை அழைக்கிறது. ஓய்வுநாளைக் கைக்கொள்வது, வரவிருக்கிற புதிய வானமும் புதிய பூமியும் ஏதேனின் பரிபூரணத்தைப்போலவே இருக்கப்போவதையும் காட்டுகிறது. ஏதேனின் மாட்சிமை ஒருநாளில் மீண்டும் புதுப்பிக்கப்படப்போவதை நினைவுப்படுத்துகிறது.

---

**செவந்த்-டே அட்வென்டிஸ்டுகள் கிரியைத்துவக்காரர்கள் என்று குற்றஞ்சாட்டுகிறார்கள்; அதற்கு ஓய்வுநாளைக் காரணம் காட்டுகிறார்கள். ஓய்வுநாளானது விசுவாசத்தால் கிடைக்கிற நீதிக்கும் மீட்புக்கும் அடையாளமாக இருப்பதுபற்றி விவாதியுங்கள். இளைப்பாறும்படியான தேவகட்டளைக்குக் கீழ்ப்படிவது, கிரியையால் பரலோகத்திற்குச் செல்ல நாம் எடுக்கிற முயற்சியென பிறர் கருதுவதற்கு எவ்வாறு வழிவகுக்கிறது?**

# மிருகத்தின் முத்திரை

**சாத்தானின் கோபம்பற்றி வெளி 12:12,17; 13:7 என்ன சொல்கின்றன? கடைசிக் கால தேவமக்கள்மீது பிசாசு மிகுந்த கோபத்தோடு இருப்பது ஏன்?**

---

காலங்கள் நெடுகிலும் கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையே காணப்படுகிற பிரபஞ்ச யுத்தம்பற்றி வெளி 12 பேசுகிறது. அந்த யுத்தத்தின் உச்சக்கட்டமாக தேவ மக்களை சாத்தான் தாக்குகிறான். வலுசர்ப்பத்தின் இரண்டு கூட்டணிகளாக கடல் மிருகமும், நில மிருகமும் இருந்ததை வெளி 13 கூறுகிறது. தேவ மக்களுக்கு எதிராக யுத்தம்செய்ய இந்த இரண்டு வல்லமைகளும் அவனோடு சேர்ந்துகொள்கின்றன.

**பின்வரும் வசனங்களில் வெளிப்படுகிற முக்கியக் கருத்து என்ன? வெளி 13:4,8, 12,15; வெளி 14:7, 9-11. (வெளி 15:4; 16:2; 19:20; 20:4; 22:9ஐப் பார்க்கவும்.)**

முரண்பாட்டைக்கவனியுங்கள். மக்கள் ஒன்று சிருஷ்டிகரைத் தொழுகிறார்கள்; அல்லது வேறு எதையாவது தொழுகிறார்கள். சிருஷ்டிகர்மட்டுமே தொழுகைக்குப் பாத்திரர். வெளி 5:9. கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையே நடக்கிற போராட்டமானது தொழுகையின் அடிப்படையில்தான் பரலோகத்தில் தொடங்கியது: 'நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன்'. ஏசா 14:14. சிருஷ்டிகருக்குமட்டுமே உரிய தொழுகையை சாத்தான் பெற விரும்பினான். வெளி 13இன்படி, பூமியிலிருந்து எழும்பின மிருகத்தின்மூலம் அவன் வெற்றிபெறுகிறான். வெளி 13:4.

இதை தானி 7 உடன் ஒப்பிடும்போது, பூமியிலிருந்து எழும்பின இந்த மிருகம்தான் 'காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற' நினைத்த சின்ன கொம்பு; 1260 தீர்க்கதரிசன 'நாட்கள்', அதாவது, 1260 வருடங்கள் அதிகாரம் செலுத்தின சின்னகொம்பு என்பது தெரிகிறது. பத்துக்கட்டளைகளில் காலம் சம்பந்தப்பட்ட கட்டளை நான்காம் கற்பனை மட்டுமே. இந்தச் சபை, தொழுகையின் நாளை வாரத்தின் ஏழாம்நாளாகிய சனிக்கிழமையிலிருந்து முதல்நாளாகிய ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்ற முயற்சித்தது.

தேவன் தம் அதிகாரத்திற்கு அடையாளமாகக் கொடுத்திருந்த தொழுகையின் நாளாகிய ஓய்வுநாளை (யாத் 31:13; எசே 20:12,20) மாற்ற பூமியின் ஒரு வல்லமை முயன்றது என்பது தேவனுடைய அதிகாரத்தை அபகரிக்க அது முயன்றதைக் காட்டுகிறது. எனவே, இந்த விஷயம்தான், மெய்-பொய் தொழுகைக்கு இடையேயான இறுதி யுத்தத்தில் முக்கியப் பங்காற்றும்.

அதனால்தான் வெளிப்படுத்தல், தேவனுக்கு உண்மையாக இருக்கிற மக்களை 'தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள்' என்று அடையாளப்படுத்துகிறது. வெளி 12:17; 14:12. தேவனுடைய கற்பனைகளில் ஞாயிற்றுக்கிழமை அல்ல, ஏழாம்நாளாகிய ஓய்வுநாள் இடம்பெற்றுள்ளது. தேவனையும் அவரது பரிசுத்த நாளையும் (ஏசா 58:13) தொழும்படி மூன்று தூதர்களும் கொடுத்த இறுதி அழைப்புக்குக் கீழ்ப்படிய மறுக்கிறவர்களும், மிருகத்தின் பொய் ஓய்வுநாளான ஞாயிற்றுக்கிழமையில் அவனைத் தொழுகிறவர்களும், மிருகத்தின் முத்திரையைப் பெறுவார்கள் (பார்க்கவும் பாடம் 11).

# முன்று தூதர்களின் செய்திகள்

வெளி 14:7இல் முதலாம் தூதன் மிகுந்த சத்தமிட்டு, 'தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்களென்று கூறினான்'. நியாயத்தீர்ப்பு நெருங்கிவிட்டதால், சிருஷ்டிகருக்கே நம் மேலான மெய்ப்பற்றையும் இதயப்பூர்வமான தொழுகையையும் கொடுக்கும்படிக்கு பரலோகம் வேண்டிக்கொள்கிறது.

இரண்டாம் தூதன், 'பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே! என்றான்'. வெளி 14:8. பாபிலோன் என்பது, பொய்தொழுகை முறைக்கு ஆதரவாக முதலாம் தூதனுடைய செய்தியை மறுத்த தேவதுரோக மத அமைப்பைக் குறிக்கிறது. அதனால்தான் மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் தொழவேண்டாமென வெளி 14:9-11 எச்சரிக்கிறது. இரண்டு எதிரெதிர் தீர்மானங்கள்பற்றிச் சொல்லப்படுகிறது. ஒன்று, சிருஷ்டிகரைத் தொழவேண்டும்; அல்லது மிருகத்தைத் தொழவேண்டும். தங்கள் மெய்ப்பற்று இயேசுவுக்கா, சாத்தானுக்கா? இந்தத்தீர்மானத்தைபூமியிலுள்ளஒவ்வொருவரும்செய்தாகவேண்டும்.

**மிருகத்தைத் தொழ மறுப்பவர்களை அடையாளப்படுத்துகிற இரண்டு தன்மைகள் என்ன? வெளி 14:12. இரண்டும் ஏன் மிகமுக்கியமானவை?**

உலக வரலாற்றில் கடைசிக்காலத்தில் கடும் உபத்திரவமும் எதிர்ப்பும் காணப்படுகிற நிலையில், தமக்கு உண்மையாக இருக்கிற சிலரை தேவன் வைத்திருப்பார். கிறிஸ்துவின் நீதியை ஈவாகப் பெற்று, கிருபையில் நிறைந்த, கீழ்ப்படிதலான வாழ்க்கை வாழ்வார்கள். சிருஷ்டிகரைத் தொழுகிறவர்கள், மிருகத்தைத் தொழாமல், தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்கிறார்கள். மெய்ப்பற்று கிறிஸ்துவின் மீதா, மிருகத்தின் மீதா என்கிற இறுதி யுத்தத்தில் தொழுகை மையமாக இருக்கிறது; நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கிற மாபெரும் போராட்டத்தில் ஓய்வுநாள் மையமாக இருக்கும்.

இரட்சகர்மேல் அர்ப்பணிப்புள்ள இந்த விசுவாசிகள் 'இயேசுமேல்' விசுவாசத்தை மட்டுமல்ல, 'இயேசுவின்' விசுவாசத்தைப் பெற்றிருப்பார்கள். இயேசுவின் விசுவாசம் என்பது ஆழமான, உறுதியாக நம்புகிற, அர்ப்பணிப்புமிக்க, நரகத்தின் பிசாசுகளும் பூமியின் சோதனைகளும் அசைக்கமுடியாத விசுவாசமாகும். அந்த விசுவாசம் காணமுடியாததை நம்புகிற விசுவாசம்; ஏனென்று காரணமறிய முடியாவிட்டாலும் ஏற்றுக்கொள்கிற விசுவாசம்; புரியமுடியாவிட்டாலும் எதிர்பார்ப்போடு இருக்கிற விசுவாசம். இயேசுவின் விசுவாசம் என்பது ஓர் ஈவு; அதை விசுவாசத்தால் பெறுகிறோம். நெருக்கடியை வெற்றிகரமாக நாம் கடந்துசெல்ல அது உதவும். இறுதி நெருக்கடி நிலை ஏற்பட்டு, பொருளாதாரத் தடைகள், உபத்திரவம், சிறைத்தண்டனை, மரணம் போன்றவற்றை நாம் சந்திக்கும்போது, இயேசுவின் விசுவாசமானது அவர் வருமட்டும் நம்மை உறுதியாக வைத்திருக்கும்.

---

**எதிர்காலத்தில் வரவிருக்கிற காரியங்களுக்காக உங்கள் விசுவாசத்தை தேவன் எவ்வாறு ஆயத்தம் பண்ணி வருகிறார்?**

# மேலும் படிக்க:

'தங்களுக்குச் சாதகமாக வேதாகமச் சான்று இல்லாத நிலையில், இதே போன்றுதான் கிறிஸ்துவுக்கும் அவரது சீடர்களுக்கும் எதிராக வாதம் செய்யப்பட்டதை மறந்து, கொஞ்சங் கூட சளைக்காமல், "நம் மத்தியில் வாழ்ந்த பெரிய மனிதர்கள் ஏன் ஓய்வுநாள் குறித்த விஷயத்தைப் புரிந்துகொள்ளவில்லை? உங்களைப் போல ஒரு சிலர்தானே நம்புகிறார்கள். நீங்கள் சொல்வது சரியாக இருக்கவும், உலகத்திலுள்ள அறிஞர்கள் அனைவரும் சொல்வதும் தவறாக இருக்கவும் வாய்ப்பில்லை' என்கிறார்கள்.

'ஆனால், கடந்த தலைமுறைக் கிறிஸ்தவர்கள் தாங்கள் வேதாகம ஓய்வுநாளையே ஆசரிப்பதாக நினைத்துக்கொண்டு ஞாயிற்றுக்கிழமையை ஆசரித்தார்கள்; மேலும் இப்போது ரோமன் கத்தோலிக்க ஐக்கியத்தில் மட்டுமல்ல, ஒவ்வொரு சபையிலுமே, ஞாயிற்றுக்கிழமை தேவன் ஏற்படுத்தின ஓய்வுநாள் என்று உண்மையாகவே நம்புகிற மெய்க்கிறிஸ்தவர்கள் உள்ளனர். அவர்களது உண்மையான நோக்கத்தையும் தமக்குமுன் அவர்களது நாணயத்தையும் தேவன் ஏற்றுக்கொள்ளுகிறார். ஆனால் ஞாயிறு ஆசரிப்பை சட்டத்தை இயற்றி கட்டாயமாக்கும்போது, உண்மையான ஓய்வுநாளை ஆசரிப்பதின் கடமைகுறித்து வெளிச்சம் கொடுக்கப்படும்போது, ரோமின் அதிகாரத்தைவிட வேறு எந்த மேலான அதிகாரத்தாலும் இயற்றப்படாத ஒரு சட்டத்திற்குக் கீழ்ப்படிவதற்காக தேவனுடைய கற்பனையை மீறுகிற எவரும், தேவனுக்கு மேலாக போப்புமார்க்கத்தையே கனப்படுத்துவார்கள். அப்படிப்பட்டவன் ரோமுக்கும், ரோம் இயற்றிய சட்டத்தைக் கட்டாயப்படுத்துகிற அதிகாரத்திற்கும் தொழுகையைச் செலுத்துகிறான். மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்குகிறான். இவ்வாறாக தேவன் தம் அதிகாரத்தின் அடையாளமாகச் சொல்லியிருப்பதை மனிதர்கள் நிராகரித்து, அதற்குப் பதிலாக ரோம் தன் மேலாதிக்கத்தின் அடையாளமாகக் கருதுவதை மேன்மைப்படுத்தும்போது, ரோமுடன் கைகோர்க்கிற அடையாளத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்கள்; அந்த அடையாளம் 'மிருகத்தின் முத்திரை'. இந்தப் பிரச்சினை இவ்வித மாக மக்கள்முன் தெளிவாக வைக்கப்பட்டு, அவர்கள் தேவனுடைய கற்பனைகளுக்கும், மனிதனுடைய கற்பனைகளுக்கும் இடையில் ஒன்றைத் தெரிந்துகொள்ளும்படி கொண்டுவரப்பட்ட பிறகும், தொடர்ந்து மீறுதலில் ஈடுபடுபவர்கள் 'மிருகத்தின் முத்திரையைப் பெறுவார்கள்'

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *நினைக்கமுடியாத வேகத்தில் உலகம் மாறிவருகிறது. ஆயத்தமில்லாத நிலையில் கடைசிக்கால நிகழ்வுகள் வராதபடி ஏன் எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டும்?*
2. *நியாயத்தீர்ப்பு, தேவபிரமாணம்பற்றிப் புரிந்துகொள்வது, நாம் கிருபையால் மட்டுமே இரட்சிக்கப்படுவதை விளங்கிக்கொள்ள எவ்வாறு உதவுகிறது?*
3. *மெய்யான ஓய்வுநாளின் முக்கியத்துவத்தை உணராமல், வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில் உண்மையோடு ஆராதனை செய்கிறவர்களிடம் எந்தெந்த வழிகளில் சாட்சிபகருவீர்கள்?*
4. *சபையும் அரசு அதிகாரங்களும் கைகோர்ப்பதில் உள்ள ஆபத்துக்கள் என்ன? கிறிஸ்தவர்கள் அரசாங்கத்துடன் எத்தகைய உறவைப் பராமரிக்கவேண்டும்?*

# ஆலயத்திலிருந்து ஓடுதல்: பகுதி 2

ஒரு ஐரோப்பிய பட்டணத்தில், இரண்டு இளம் அகதிகள் இயேசுவை ஏற்றுக்கொண்ட பிறகு, தங்கள் அம்மாவிடம் இயேசுவை ஏற்றுக்கொள்ளுமாறு சொல்ல ஆரம்பித்தார்கள்.

"அம்மா, நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டாமா?" என்று 20 வயது ரோஸென் கேட்டான். "என் மதத்தை விடமாட்டேன்! நான் சாகிறவரை விடமாட்டேன்!" என்று எரிமலையாக வெடித்தார்; மேசையில் வேகமாக அடித்தார். இயேசு மனிதர்களுடைய பாவங்களுக்காக மரித்து, சிலுவையில் அறையப்பட்டாரென 22 வயது மகன் செர்ஜி சொன்னான். "அப்படி நடந்திருக்க வாய்ப்பே இல்லை" என்று அனெலியா சொன்னார். "நீங்கள் இயேசுவை விசுவாசித்தவராக மரித்திருந்தால், நீங்களும் உயிர்த்தெழப்படுவீர்கள்" என்று செர்ஜி சொன்னான்.

ஒருநாள் யோவான் 3:36ஐ அம்மாவுக்கு வாசித்துக் காண்பித்தான்: 'குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்'. "நாம் மரித்தாலும், இயேசு திரும்ப வரும்போது கல்லறையிலிருந்து உயிர்த்தெழுவோம்" என்று சொன்னான்.

"மகனே, நாம் எவ்வாறு கல்லறைகளிலிருந்து உயிர்த்தெழ முடியும்" என்று அனெலியா கேட்டார். "நாம் மீண்டும் வாழுவோம்" என்று மகன் சொன்னான். அது விசேஷித்த ஒரு விஷயமாகத் தோன்றியது. மனதில் மிகப்பெரிய கேள்வியாக எழும்பியது. உயிர்த்தெழுவதும், நித்தியமாக வாழ்வதும் சாத்தியமா?

முன்பு குழப்பமாகத் தோன்றின வசனங்களின் அர்த்தம்புரியத் துவங்கியது. தங்களை முதன்முதலாக ஆலயத்திற்கு அழைத்த பவுல் என்பவர் வேதாகமத்திலிருந்து வாசித்த விஷயங்களும், முதன்முதலாக ஆலயம் சென்றபோது கேட்ட விஷயங்களும் புரிய ஆரம்பித்தன. இருதயத்தில் மகிழ்ச்சி நிறைந்தது. பரிசுத்த ஆவியானவர் தன் இருதயத்தில் பிரவேசித்திருந்ததே காரணம் என்பதை அனெலியா பின்னர் புரிந்துகொண்டார். இயேசுவை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அவரோடு நேரம் செலவிடவும் ஆலய ஆராதனைகளில் கலந்துகொள்ளவும் ஆசை உருவானது.

பிறகு அவருடைய 15 வயது மகள் ஞானஸ்நானம் பெற்றாள். தன் இரண்டு மகன்களும் ஞானஸ்நானம் எடுத்தபோது அனெலியா செல்லவில்லை; ஆனால் தன் மகளுடைய ஞானஸ்நானத்திற்குச் சென்றாள். ஞானஸ்நானம் பெற்ற பிறகு, அவளை வாழ்த்தினார். "அம்மா, அடுத்து நீங்கள்தான்" என்று மகள் சொன்னாள்.

செர்ஜி தன் அம்மாவுக்கு வேதாகம விஷயங்களை விளக்கினார்; அம்மாவும் தானாகவே வேதாகமத்தை வாசித்தார். கிறிஸ்துவுக்காக வாழவேண்டும் என்கிற தாகம் உண்டானது. பிறகு தன்னுடைய 47 வது வயதில், இயேசுவை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றார். "47 வருடங்களில் முதன்முறையாக அப்போதுதான் அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தேன். இயேசுவை நம்பி, ஏற்றுக்கொண்டேன்" என்று சொன்னார்.

இன்று அனெலியாவுக்கு 48 வயது; தன் மக்கள் மத்தியில் நற்செய்தி ஊழியம் செய்கிறார். அவரது கணவரும் வேதாகம சத்தியத்தை ஏற்றுக்கொண்டார்; அவர்களது தாய்நாட்டில் வசிக்கிற அவர்களது பெற்றோரும் ஓய்வுநாளைக் கைக்கொண்டு வருகிறார்கள்.